22 JAN 1982

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக் கிழமை 1981 பிப்ரவரி 12

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் —

‘‘ கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.’’

ஓர் உயிரையும் கொலை செய்யாத அறிவை அடிப்படையாகக் கொண்டது தவம். இதைப்போல் பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது சால்பு.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

117 முதல் 194-ம் பக்கங்களில் பார்க்க

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்

. . . . .வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் பார்க்க.

(அ) பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை நான் பேரவைக்கு அளிக்கிறேன் :

1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகள் இவற்றில் சில துறைகள் தொடர்பான குறிப்புகளின் மீதான மேற்படி குழுவின் அறிக்கை (பகுதி 1) மூன்றாவது அறிக்கை ;

தமிழ்நாடு அரசின் 1960–61 முதல் 1971–72 ஆண்டு வரையிலான கணக்குகள் மீதான குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை (நான்காவது அறிக்கை) ;

1975–76 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கையின் (சிவில்) மீதான மேற்படி குழுவின் (ஐந்தாவது அறிக்கை);